## சுருக்கம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – மேயர்/தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படி – உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்.) துறை

அரசாணை (இருபதாண்டு) எண்.104 நாள்:26.06.2007.

படிக்க:

1. அரசாணை (பத்தாண்டு) எண்.213, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.05.1999.
2. அரசாணை (இருபதாண்டு) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.06.2005.
3. ஆணையர், சென்னை மாநகராட்சி கடித எண்.ஆ1/802/2005, நாள் 12.09.2005.

---

**ஆணை:–**

பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி தலைவர் / மேயர் / உறுப்பினர்கள் ஆகியோருக்கு மன்றக் கூட்ட எண்ணிக்கையை பொருட்படுத்தாது மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கென தற்போது வழங்கப்படும் அமர்வுப்படித்தொகை பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்காணுமாறு நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு | பதவி | அமர்வுப்படி (ரூபாய்) |
|---|---|---|
| மாநகராட்சிகள் | மேயர் மற்றும் உறுப்பினர்கள் | 550 |
| நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 330 |
| மூன்றாம் நிலை நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 165 |
| பேரூராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 150 |

2. சென்னை மாநகராட்சி ஆணையர், பார்வை 3–ல் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், தற்போது வழங்கப்பட்டுவரும் அமர்வுப்படியை உயர்த்த மீண்டும் பரிசீலனை செய்ய அரசைக் கேட்டுக் கொண்டு சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானம் இயற்றியுள்ளதாகவும், எனவே, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் அமர்வுப்படியை ரூ.550/–லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்துவது குறித்து மீண்டும் பரிசீலனை செய்ய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இதற்கிடையே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாக பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் 07.03.2007 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மாத அமர்வுப்படியை உயர்த்தி வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. 2007–08 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கை மீது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்கு

12.04.2007 அன்று பதிலளித்து பேசும்பொழுது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினையும் வெளியிட்டுள்ளார்கள்:—

"நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படி உயர்த்தி வழங்கப்படும்."

4. இதனடிப்படையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியை உயர்த்தி வழங்குவது குறித்து கவனமான பரிசீலனைக்குப் பின்னர் கீழ்க்காணுமாறு உயர்த்தி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு | பதவி | அமர்வுப்படி (ரூபாய்) |
|---|---|---|
| மாநகராட்சிகள் | மேயர் மற்றும் உறுப்பினர்கள் | 800 |
| நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 600 |
| மூன்றாம் நிலை நகராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 500 |
| பேரூராட்சிகள் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | 300 |

5. எனினும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்களை பயன்படுத்தும் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு அமர்வுப்படி வழங்கப்பட மாட்டாது என பார்வை 1—ல் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை — 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை — 600 108.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை — 5 வழியாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை — 5 வழியாக)
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை — 5 வழியாக)
அனைத்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை — 108 வழியாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைக் கணக்குகள், சென்னை — 108.
ஆணையர், கருவூல கணக்குகள், சென்னை — 15.
நகல்:— மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை — 9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
நிதித் துறை, சென்னை — 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5, பேரூ.2, மாந.1 மற்றும் மாந.2) துறை, சென்னை—9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்